Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, ஏப்ரல் 19, 2025 | இதழ் 6

# தாவூதி போரா சமூகத்தின் பிரதிநிதிக் குழுவினருடன் பிரதமர் கலந்துரையாடினார்

சென்னை, 19 ஏப்ரல் 2025: பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காலை லோக் கல்யாண் மார்கில் உள்ள தனது இல்லத்தில் தாவூதி போரா சமூகத்தின் பிரதிநிதிக் குழுவினருடன் கலந்துரையாடினார்.

இந்தக் குழுவில் வர்த்தகத் தலைவர்கள், தொழில் வல்லுநர்கள், மருத்துவர்கள், கல்வியாளர்கள் மற்றும் தாவூதி போரா சமுதாயத்தின் பல்வேறு முக்கிய பிரதிநிதிகள் இடம்பெற்றிருந்தனர். அவர்கள் தங்கள் போராட்டங்களை விவரித்தனர் மற்றும் தங்கள் சமூகத்தின் உறுப்பினர்களுக்கு சொந்தமான சொத்துக்கள் வக்ஃப்பால் எவ்வாறு தவறாகக் கோரப்பட்டன என்ற கதைகளைப் பகிர்ந்து கொண்டனர். வக்ஃப் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்த அவர்கள், இது நீண்டகால கோரிக்கை என்றும் கூறினர்.

தாவூதி போரா சமூகத்தினருடன் பிரதமருக்கு உள்ள நீண்டகால சிறப்பு தொடர்பு குறித்தும், அவர் ஆற்றிய ஆக்கப்பூர்வமான பணிகள் குறித்தும் அவர்கள் எடுத்துரைத்தனர். தங்கள் சமூகத்திற்கு இந்த சட்டத்தின் நன்மை குறித்து பேசிய அவர்கள், பிரதமர் இந்த சட்டத்தை சிறுபான்மையினருக்கு மட்டுமல்ல, சிறுபான்மையினருக்குள் உள்ள சிறுபான்மையினரின் நலனுக்காகவும் கொண்டு வந்துள்ளார் என்று கூறினர். தங்கள் அடையாளம் தழைத்தோங்க இந்தியா எப்போதும் அனுமதித்துள்ளது என்று கூறிய அவர்கள், பிரதமரின் தலைமையின் கீழ், அனைவரையும் உள்ளடக்கிய உணர்வை உணர்கிறோம் என்றும் கூறினர்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த பாரதம் பிரதமரின் தொலைநோக்குப் பார்வை குறித்து விவாதித்த அவர்கள், இந்தியாவை வளர்ச்சியடையச் செய்வதற்கான பயணத்தில் சாத்தியமான அனைத்து உதவிகளையும் உறுதிபூண்டு வருவதாகத் தெரிவித்தனர். உண்மையான வளர்ச்சி, மக்களை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் கவனம் செலுத்தும் அவரது தலைமைத்துவத்தையும் அவர்கள் பாராட்டினர். தற்சார்பு இந்தியா, எம்.எஸ்.எம்.இ.களுக்கான ஆதரவு போன்ற பல முக்கிய முயற்சிகளை அவர்கள் பாராட்டினர், அவை குறிப்பாக சிறு வணிகங்களுக்கு மிகவும் உதவியாக இருந்தன என்று கூறினர். பெண் குழந்தைகளை பாதுகாப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் மற்றும் பெண் சக்திக்கு அதிகாரம் அளிக்கும் இதர நடவடிக்கைகளுக்கும் அவர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

வக்ஃப் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து பிரதமர் பேசினார். வக்ஃப் காரணமாக மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்து பேசிய அவர், இந்த சட்டத்தைக் கொண்டு வந்ததன் பின்னணியில் உள்ள முக்கிய உந்துதல்களில் ஒன்று, நடைமுறையில் உள்ள அமைப்பால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் பெண்கள், குறிப்பாக விதவைகள் என்று கூறினார்.

# நிலக்கரி இறக்குமதி கண்காணிப்பு அமைப்பு போர்ட்டலுக்கான பதிவு கட்டணத்தை சீரமைத்தது நிலக்கரி அமைச்சகம்

சென்னை, 19 ஏப்ரல் 2025: நிலக்கரி இறக்குமதி கண்காணிப்பில் வெளிப் படைத்தன்மை மற்றும் செயல்திறனை வலுப்படுத்தும் நடவடிக்கையாக நிலக்கரி அமைச்சகம் நிலக்கரி இறக்குமதி கண்காணிப்பு அமைப்பு போர்ட்டலை உருவாக்கி செயல் படுத்தி வருகிறது.

நிலக்கரி இறக்குமதி அறிக்கையை ஒழுங்குபடுத்துவதற்காக இந்த போர்ட்டல் உருவாக்கப்பட்டுள்ளது. இது, பயனுள்ள கொள்கை உருவாக்கம், துறை பகுப்பாய்வுக்கு துல்லியமான தரவை உறுதி செய்கிறது. நிலக்கரி இறக்குமதியாளர்கள், இந்திய துறைமுகத்திற்கு சரக்குகள் வரும்போதோ அல்லது அதற்கு முன்போ இந்த இணையதளத்தில் தங்கள் சரக்குகளின் விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

வர்த்தகம் செய்வதை எளிமையாக்கவும், இறக்குமதி கண்காணிப்பு தளங்களில் ஒரே விதமான தன்மையை உறுதி செய்யவும், நிலக்கரி அமைச்சகம் இந்த இணையதளத்தின் பதிவுக் கட்டணத்தை சீரமைத்துள்ளது.

ஒரு சரக்குக்கு ரூ.500 என்ற நிலையான விகிதத்தில் திருத்தி அமைக்கப்பட்டுள்ள பதிவுக் கட்டணம் 2025 ஏப்ரல் 15 முதல் நடைமுறைக்கு வருகிறது. இறக்குமதியாளர்கள் இந்த இணையதள மூலம் தானியங்கி பதிவு எண்ணைப் பெற வேண்டும், இது சுங்க அனுமதியின் போது நுழைவுச் சீட்டாக பயன்படுத்தப்படுகிறது.

# பாரம்பரிய பாதுகாப்புக்கான இந்தியாவின் பயணம்

சென்னை, 19 ஏப்ரல் 2025: "பாரம்பரியம் என்பது வரலாறு மட்டுமல்ல. மாறாக அது மனிதகுலத்தின் பகிரப்பட்ட முயற்சியாகும். வரலாற்று தலங்களைப் பார்க்கும் போதெல்லாம், அது தற்போதைய புவிசார் அரசியல் காரணிகளிலிருந்து நம் மனதை மேலானதாக உயர்த்துகிறது".

பிரதமர் நரேந்திர மோடி கலாச்சார மற்றும் இயற்கை பாரம்பரியத்தை கௌரவிக்கவும் அவற்றை பாதுகாப்பதற்கும் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 18-ம் தேதி உலக பாரம்பரிய தினம் கொண்டாடப் படுகிறது.

2024 அக்டோபர் நிலவரப்படி, 196 நாடுகளில் 1,223 உலக பாரம்பரிய தலங்கள் உள்ளன. இவற்றில் 952 கலாச்சார தலங்களாகும். 231 இயற்கை தலங்களாகும். 40 இடங்கள் இரண்டும் இணைந்த தலங்களாகும். இந்தியாவில் 43 உலக பாரம்பரிய தலங்கள் உள்ளன. ஆக்ரா கோட்டை, தாஜ்மஹால், அஜந்தா, எல்லோரா குகைகள் போன்றவை 1983-ம் ஆண்டின் முதல் பட்டியலில் அடங்கியுள்ளன. நமது பாரம்பரியம் வெறும் கற்கள், எழுத்துக்கள் அல்லது கட்டடங்களால் கட்டமைக்கப் படவில்லை. பழங்கால கோயில்கள், கோட்டைகள், சிற்பங்கள், தலைமுறைகளைக் கடந்த நாட்டுப்புறக் கலைகள் போன்ற வற்றில் அவை உள்ளன. இந்தக் காலத்தால் அழியாத பொக்கிஷங்கள் போற்றப்பட வேண்டியதன் அவசியத்தையும் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் உலக பாரம்பரிய தினம் நினைவூடுகிறது. இந்த ஆண்டு உலக பாரம்பரிய தினத்தின் கருப்பொருள்: "பேரழிவுகள் மற்றும் மோதல்களிலிருந்து பாரம்பரியங்களைப் பாதுகாத்தல்" என்பதாகும்.

உலக பாரம்பரிய தினம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 18 அன்று கொண்டாடப் படுகிறது. இது நினைவுச்சின்னங்கள், பாரம்பரிய தலங்களுக்கான சர்வதேச தினம் என்றும் அழைக்கப்படுகிறது.

மனித பாரம்பரியத்தை மதிக்கவும் பாதுகாக்கவும் இந்த நாள் கொண்டாடப் படுகிறது. இந்த நாளில் பாரம்பரியத்தைக் கொண்டாடவும் பாதுகாக்கவும் உலகம் முழுவதும் நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

இந்தியாவில் 3,697 புராதன நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்திய தொல்லியல் ஆய்வகம் அவற்றின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கு பொறுப்பாக உள்ளது. பாரம்பரிய தலங்களை புதுப் பித்தல், மேம்பாடு செய்தல் போன்ற வற்றின் மூலம் மத்திய அரசு முக்கிய பாரம்பரிய தலங்களுக்கு புத்துயிர் அளித்துள்ளது.

நமது பாரம்பரியத்தைப் பாதுகாப்பது பகிரப்பட்ட பொறுப்பு என்பதை உலக பாரம்பரிய தினம் நமக்கு நினைவூட்டுகிறது. நமது வளமான பாரம்பரியம் வரவிருக்கும் தலைமுறையினருக்கு ஊக்கமளிப்பதாக உள்ளது.

# தனியார் சுற்றுலா ஏற்பாட்டாளர்களுக்கு ஒதுக்கிய 52 ஆயிரம் ஹஜ் இடங்கள் ரத்து: சவுதி அரேபியா அரசிடம் சொல்லி விரைவான தீர்வு காண பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்



சென்னை, 19 ஏப்ரல் 2025: ஹஜ் ஒதுக்கீட்டு விவகாரத்தை சவுதி அரேபிய அரசிடம் எடுத்துச் சென்று விரைவான தீர்வை பெற வேண்டும் என பிரதமர் மோடிக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி உள்ளார்.

இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

வரவிருக்கும் 2025 ஹஜ் புனிதப் பயணத்திற்கு ஆவலுடன் தயாராகிவரும் தமிழகம் உட்பட ஆயிரக்கணக்கான இந்திய முஸ்லிம்கள் மத்தியில், தனியார் ஹஜ் ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டிருப்பது குறித்த செய்தி மிகுந்த வருத்தத்தை உண்டாக்கி உள்ளது.

இந்த அவசர மற்றும் கவலையளிக்கும் விஷயத்தை பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். ஹஜ் என்பது இஸ்லாத்தின் ஐந்து கடமைகளாகக் கருதப்படும் தூண்களில் ஒன்றாகும். இது முஸ்லிம்களுக்கு மிகவும் புனிதமான மற்றும் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே மேற்கொள்ளும் மதக் கடமை. ஆன்மிக முக்கியத்துவத்தைக் கொண்டுள்ள இந்தப் புனிதப் பயணத்தை மேற்கொள்வதற்காக முஸ்லிம்கள் தங்கள் வாழ்நாள் சேமிப்பினை செலவு செய்கிறார்கள்.

இந்த ஆண்டு, ஹஜ் பயணம் 4.6.2025 முதல் 9.6.2025 வரை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தியாவிலிருந்து பயணிகள் வழக்கமாக 2025 மே மாதத்தில் சவுதி அரேபியாவுக்கு தங்கள் பயணத்தைத் தொடங்குவார்கள்.

கடந்த 2024-ம் ஆண்டில், சுமார் 1,75,000 இந்திய ஹஜ் பயணிகள் புனிதப் பயணத்தில் பங்கேற்றதாகவும், இதற்காக ஜனவரி 2025-இல், இந்தியா சவுதி அரேபியாவுடன் இருதரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, 1,75,025 ஹஜ் பயணிகளுக்கான ஒதுக்கீட்டை இறுதி செய்தது என்றும், இந்த ஒதுக்கீடு 70:30 என்ற விகிதத்தில் மாநில ஹஜ் கமிட்டிகள் மற்றும் தனியார் ஹஜ் சுற்றுலா ஏற்பாட்டாளர் களிடையே பிரிக்கப் பட்டு உள்ளது.

அதன்படி, 2025-ம் ஆண்டுக்கான மாநில ஹஜ் குழுக்களுக்கு 1,22,517 இடங்களும், தனியார் ஹஜ் சுற்றுலா ஏற்பாட்டாளர்களுக்கு 52,507 இடங்களும் ஒதுக்கப்பட்ட நிலையில் சவுதி அரேபியா திடீரென இந்தியாவுக்கான ஹஜ் ஒதுக்கீட்டை குறைத்துள்ளதாக தகவல் வந்துள்ளது.

இதன் காரணமாக தனியார் ஹஜ் சுற்றுலா ஏற்பாட்டாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த சுமார் 52,000 ஹஜ் இடங்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளது. இந்த திடீர் முடிவு ஏற்கனவே பணம் செலுத்தியுள்ள பல ஹஜ் பயணிகளை ஆழ்ந்த கவலையிலும் நிச்சயமற்ற நிலையிலும் ஆழ்த்தியுள்ளது.

இந்த நிலைமையின் தன்மையைக் கருத்தில்கொண்டு, இந்த பிரச்சினையை அவசரமாக சவுதி அரேபிய அரசிடம் எடுத்துச்சென்று விரைவான தீர்வைப் பெற வேண்டும். பிரதமரின் தலையீடு, ஹஜ் ஒதுக்கீட்டில் முந்தைய அளவினை மீண்டும் கொண்டு வந்து, ஹஜ் பயணிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஹஜ் பயணத்தை மேற்கொள்வதற்கான உறுதியை அளிக்கும் என உறுதியாக நம்புகிறேன். இவ்வாறு அந்த கடிதத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறி உள்ளார்.

# சீனாவுக்கு வரியை 245 சதவீதமாக உயர்த்திய அமெரிக்கா வர்த்தகத்தில் அச்சுறுத்தல் கூடாது: அமெரிக்காவுக்கு சீனா வலியுறுத்தல்



சென்னை 19, ஏப்ரல் 2025: சீன பொருட்களுக்கு இதுவரை 145 சதவீதமாக இருந்த இறக்குமதி வரியை 245 சதவீதமாக உயர்த்துவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இதற்கு வர்த்தகத்தில் அச்சுறுத்தல் கூடாது, பேச்சுவார்தைக்கு வாருங்கள் என அமெரிக்காவுக்கு சீனா வலியுறுத்தி உள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் தமது நாட்டுக்கு முன்னுரிமை அளிக்கும் விதமாக உலக நாடுகளுக்கு பரஸ்பர வரியை விதித்தார். குறிப்பாக இந்தியாவுக்கு 27 சதவீதம், அண்டை நாடான சீனாவுக்கு 125 சதவீதம் என அதிரடி காட்டினார்.

இதற்கு உலக நாடுகளிடையே கடும் கண்டனம் எழுந்தது. இதனால் பரஸ்பர வரிவிதிப்பை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் 90 நாட்கள் நிறுத்தி வைத்துள்ளார்.

ஆனால் சீனாவுக்கு மட்டும் இந்த வரி விதிப்பு தொடர்ந்து அமலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டது.

இதனால் சீனா அரசாங்கம் கடும் அதிருப்தி தெரிவித்தது. மேலும் அமெரிக்கா மீது பதிலுக்கு வரி விதிக்க முடிவு செய்தது.

அதன்படி அமெரிக்காவின் வரிவிதிப்புக்கு போட்டியாக அதன்மீது 125 சதவீதம் பரஸ்பர வரியை சீனா வியீத்தது.

இதற்கு பதிலடியாக சீனா மீதான வரிவிதிப்பை மேலும் 20 சதவீதம் அதிகரித்து 145 சதவீதமாக வரிவிதித்து அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உத்தரவிட்டார்.

ஆனால் ஸ்மார்ட் போன், மைக்ரோ சில்லுகள் முதலிய தொழில் நுட்ப பொருட் களுக்கான வரியில் இருந்து மட்டும் சீனாவுக்கு அமெரிக்கா விலக்கு அளித்தது.

இதனால் மேலும் கோபம் அடைந்த சீனா அரசாங்கம் அமெரிக்காவின் 'போயிங்' விமான நிறுவனத்திடம் இருந்து விமானங்கள் இறக்குமதி செய்யக்கூடாது,

அமெரிக்கா நாட்டிற்கு பார்சல் சேவை வழங்கக்கூடாது என கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்த நிலையில் சீன பொருட்களுக்கு இதுவரையில் இல்லாத வகையில் 145 சதவீத வரியை மேலும் 100 சதவீதம் உயர்த்தி 245 சதவீதமாக அதிகரிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உத்தரவிட்டார்.

சீனாவின் பழிவாங்கும் நடவடிக்கைக்கு பதிலடி கொடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை விளக்கம் அளித்துள்ளது. இதற்கு சீனா அரசாங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. ''பிளாக் மெயில், அச்சுறுத்தல் விடுக்க கூடாது" என சீனாவுக்கு அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது.

இது குறித்து சீனா வெளியுறவுத்துறை கூறுகையில்,

அமெரிக்கா வர்த்தகப் போரை தொடங்கியது. நமது நியாயமான நலன்களையும், சர்வதேச நியாயத்தையும், நீதியையும் பாதுகாக்க சீனா தேவையான எதிர் நடவடிக்கைகளை எடுத்தது.

அமெரிக்கா உண்மையிலேயே பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண விரும்பினால், அதிக பட்ச அழுத்தத்தைப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு, சீனாவை பிளாக்மெயில் செய்வதையும், மிரட்டுவதையும் நிறுத்த வேண்டும். சமத்துவம், மரியாதை மற்றும் பரஸ்பர நன்மை ஆகியவற்றின் அடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

# 'கடல்களுக்கான செயற்கை நுண்ணறிவு' என்பது வெறுமனே ஒரு ஆராய்ச்சி கருத்தாக்கம் மட்டுமல்ல; இது, மானுடத்தின் எதிர்காலத்திற்கான ஒரு செயல்திட்டம்

காட்டான்குளத்தூர் 19, ஏப்ரல் 2025: காட்டாங்குளத்தூரில் அமைந்துள்ள எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உயர்கல்வி நிறுவனத்தில் (எஸ்ஆர்எம்ஐஎஸ்தி), கடல்களுக்கான செயற்கை நுண்ணறிவு என்ற தலைப்பிலான ஒரு சர்வதேச மாநாடு நிகழ்வில் தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (என்ஐஓதி) இயக்குநர் டாக்டர். பாலாஜி இராமகிருஷ்ணன் அதனை தொடங்கி வைத்து பேசுகையில், "செயற்கை நுண்ணறிவு (ஏஐ) என்பது, ஒரு சவால் அல்ல-மாற்றத்திற்கான ஒரு வினையூக்கி" என்று குறிப்பிட்டு அழகான தொடக்கத்தை தந்தார்.




மைரன் டெக்னாலஜி சொசைட்டி (எம்திஎஸ்) இந்திய பிரிவின் ஒத்துழைப்போடு இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மூன்று நாட்கள் நிகழ்வாக நடைபெறும் இம்மாநாட்டில் அறிவியலாளர்கள், கொள்கை உருவாக்குநர்கள், கல்வியாளர்கள் மற்றும் இத்தொழில்துறையைச் சேர்ந்த நிபுணர்கள் உட்பட 250-க்கும் அதிகமான பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். சுற்றுச்சூழலுக்கான சவால்களுக்கு செயற்கை நுண்ணறிவால் ஏதுவாக்கப்படும் தீர்வுகள் என்பது குறித்து இன்னும் அதிக ஆழமாக ஆதாயமும், சிந்தனைகளை பகிர்ந்து கொள்ளவும் ஒரு சிறந்த தளத்தினை இந்த மாநாடு வழங்குகிறது.

ஐசிஏஐஓ 2025 என்ற இந்த மாநாட்டு நிகழ்வானது, "கடல்களுக்காக செயற்கை நுண்ணறிவு" என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் 2023-ம் ஆண்டு நடைபெற்ற எம்திஎஸ் டெக்சர்ஜ் நிகழ்வின் உத்வேகத்தை மேலும் வலுப்படுத்தியிருக்கிறது. கடல் பகுதிகளின் பாதுகாப்பு, தானியக்க அமைப்புகள், ஆழ்-கடல் ஆராய்ச்சி மற்றும் உலகளாவிய காலநிலை தீர்வுகள் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்குகிறவாறு 12 கருத்தாக்கங்கள் இந்த ஆண்டு நடைபெறும் மாநாட்டில் விவாதப் பொருளாக இடம் பெறுகின்றன.

கடல்சார் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவின் சமீபத்திய ஆராய்ச்சி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு குறித்த தகவல்களை, இந்த மாநாடு செயல்பாடுகள் குறித்த வெளியீடும் மற்றும் ஒரு சிறப்பு ஐஇஇஇ சிஎஸ்ஐ வெளியீடும் நேர்த்தியாக முன்னிலைப்படுத்தின.

இந்நிகழ்வின்போது உரையாற்றிய இந்திய அரசின் பூமி அறிவியல் அமைச்சகத்தின் செயலர் டாக்டர். எம். ரவிச்சந்திரன் கூறியதாவது:

"கடல் என்பது வெறுமனே ஆதாரவளங்களைக் கொண்ட அமைவிடம் மட்டுமல்ல; சிறப்பான தீர்வுகளையும் இது கொண்டிருக்கிறது.

சவால்களை வெற்றிகரமாக சமாளிக்கவும் மற்றும் உணவு, ஆற்றல், மற்றும் ஆரோக்கியத்தின் நீடித்த நிலைப்புத்தன்மையுள்ள விளைவுகளை உருவாக்கவும் அறிவியலும், தொழில்நுட்பமும் மற்றும் புத்தாக்க முயற்சிகளும் ஒருங்கிணைந்து ஒன்றாக செயல்பட வேண்டும்".

சிறப்புரை வழங்கிய டாக்டர். பாலாஜி இராமகிருஷ்ணன் பேசுகையில், "பணி செயல்பாடுகளை மறுவரையறை செய்வதிலிருந்து அதிக ஆழமான கடலை ஆராய்வது வரை, இதுவரை கண்டறியப்படாத புதிய உலகை செயற்கை நுண்ணறிவு நமக்கு காட்டுகிறது. செயற்கை நுண்ணறிவின் துணையோடு மேற்கொள்ளப்படும் கடல்சார் தொழில்நுட்பங்களில் பல்வேறு நாடுகள் முதலீடு செய்கின்ற நிலையில் எஸ்ஆர்எம்ஐஎஸ்தி-ன் இந்த முன்னெடுப்பு மிக முக்கியமான தருணத்தில் நிகழ்கிறது" என்று கூறினார்.

இந்நிகழ்வில் தலைமை உரையாற்றிய எஸ்ஆர்எம்ஐஎஸ்தி-ன் துணை வேந்தர் டாக்டர். சி. முத்தமிழ்ச்செல்வன் கூறியதாவது: "எஸ்ஆர்எம்ஐஎஸ்தி-ல், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கற்றல், ஆராய்ச்சி, புத்தாக்க கண்டுபிடிப்புகள், தொழில்துறையுடன் கூட்டாண்மைகள் மற்றும் சமூக சேவை ஆகியவற்றை ஒன்று சேர்க்கிற கல்வியின் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட மாதிரியை நோக்கி நாங்கள் முன்னேறிச் செல்கிறோம். சிர், ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பராமரிப்பு ஆகிய அம்சங்களில் நிஜ உலக பிரச்சனைகளை ஆய்வு செய்து தீர்வு காண்பது மீது எமது வலுவான கூர்நோக்கம் இருந்து வருகிறது".

இந்த மாநாட்டு நிகழ்வில் உலகெங்கிலுமிருந்து சிறப்பான கண்ணோட்டங்களை பங்கேற்பாளர்களுக்கு வழங்கும் நோக்கத்தோடு ஓசன் எண்டர்பிரைஸ் இனிஷியேட்டிவ், எம்திஎஸ்-ன் முதுநிலை இயக்குநர் திரு. ஹான்ஸ் வான் சுமேரன் மற்றும் ஐஐடி மெட்ராஸ்-ன் இயக்குநர் டாக்டர். வி. காமகோடி ஆகிய புகழ்பெற்ற ஆளுமைகளும் உரையாற்றினர்.

டாக்டர். காமகோடி பேசுகையில், "கடல்களை புரிந்து கொள்ளவும் மற்றும் அவை குறித்த ஆராய்ச்சியில் ஈடுபடவும் நமக்கு இருக்கும் திறனை செயற்கை நுண்ணறிவு மேலும் மேம்படுத்தி பெரிதாக்குகிறது. இதுவரை ஆராயப்படாத பிராந்தியங்களை அணுகவும் மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள கடலோர அமைப்புகளை கட்டமைத்து உருவாக்கவும் இது நமக்கு உதவும். பல்வேறு துறைகள் மற்றும் பிரிவுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு என்பது நீண்டகால அடிப்படையிலான சிறந்த தாக்கத்தை ஏற்படுத்த முக்கிய வழிமுறையாக இருக்கும்" என்று வலியுறுத்தினார்.

இந்த மாநாட்டு நிகழ்வின் ஒரு சிறப்பம்சமாக எம்திஎஸ் இந்தியா பிரிவின் வாழ்நாள் சாதனை விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கடல்சார் அறிவியல் துறையில் சிறப்பான பங்களிப்புகளை வழங்கிய சாதனையாளர்கள் இவ்விருதின் மூலம் கவுரவிக்கப்பட்டனர்.

# முக்கோண காதல் கதையாக உருவாகும் " என் காதலே " பெண் இயக்குனர் ஜெயலட்சுமி இயக்கியிருக்கிறார்.

சென்னை 19, ஏப்ரல் 2025: கடலும் கடல் சார்ந்த காதலுமாக உருவாகியிருக்கிறது " என் காதலே " முக்கோண காதல் கதையாக உருவாகும் " என் காதலே " பெண் இயக்குனர் ஜெயலட்சுமி இயக்கியிருக்கிறார்.



ஸ்கை வான்டர்ஸ் என்டர்டெய்ன்மென்ட் என்ற பட நிறுவனம் சார்பில் ஜெயலட்சுமி தயாரித்து எழுதி இயக்கியிருக்கும் படம் " என் காதலே "

கபாலி, பரியேறும் பெருமாள் படங்களில் துணைக் கதாப்பாத்திரங்களிலும், "காலேஜ் ரோட்" படத்தில் நாயகனாகவும் நடித்த லிங்கேஷ், இப்படத்தில் நாயகனாக நடித்துள்ளார்.

லண்டனைச் சேர்ந்த பிரிடிஷ் நடிகை லியா மற்றும் திவ்யா தாமஸ் இருவரும் நாயகியாகளாக நடித்துள்ளார்.

அறிமுக நடிகர் காட்பாடி ராஜன் வில்லனாக நடித்துள்ளார். இவர்களுடன் மதுசூதனன் ராவ், மாறன், கஞ்சா கருப்பு, சித்தா தர்ஷன், செந்தமிழ் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

மூடர் கூடம் படத்திற்கு ஒளிப்பதிவு செய்த டோனி ஜான் இந்த படத்திற்கு ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இசை - சாண்டி சாண்டெல்லோ, தனி ஒருவன் படத்தின் மூலம் பிரபலமான கோபி கிருஷ்ணா இந்த படத்திற்கு எடிட்டிங் செய்துள்ளார்.

பாடல்கள்களை கபிலன், சந்துரு, இயக்குனர் ஜெயலட்சுமி ஆகியோர் எழுதியுள்ளனர்.

ஸ்வேதா மோகன், சைந்தவி, ஸ்ரீதர் சேனா, திலீப் வர்மன் ( மலேசியா ), அனிதா ஷேக் பாடல்களை பாடியுள்ளனர்.

கலை இயக்கம் - சசிகுமார், ஸ்டண்ட் - வீர் விஜய், நடனம் - பாபி

மக்கள் தொடர்பு - புவன் செல்வராஜ், தயாரிப்பு நிர்வாகம்- பாக்கியராஜ், தயாரிப்பு - ஸ்கை வான்டர்ஸ் என்டர்டெய்ன்மென்ட், கதை, திரைக்கதை, வசனம் எழுதி தயாரித்து இயக்கியிருக்கிறார் - ஜெயலட்சுமி.

தமிழ் திரையுலகில் தற்போது பெண் இயக்குனர்கள் தங்களது திறமைகளை திறம்பட செய்து வருகிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததே அந்த வரிசையில் தற்போது ஜெயலட்சுமியும் இந்த படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் இயக்குனராக அறிமுகமாகிறார்.

படம் பற்றி இயக்குனர் ஜெயலட்சுமி நம்மிடையே பகிர்ந்தவை..

மீனவ மக்கள் வாழ்க்கை பின்னணியில் ஒரு மென்மையான, முக்கோண காதல் கதையாக இந்தப் படத்தை உருவாக்கி இருக்கிறோம்.

உலக நாடுகள் முழுவதும் நம் தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் கலாச்சாரத்திற்கு எப்போதும் தனித்துவம் உண்டு. அதை பற்றி அறிந்து கொள்வதிலும் ஆராய்ச்சி செய்வதிலும் உலக நாடுகள் அனைத்தும் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

அப்படி லண்டனிலிருந்து தமிழக கலாச்சாரத்தை ஆய்வு செய்ய, இந்தியா வரும் நாயகி லியாவிற்கு மீனவ இளைஞனான லிங்கேஷ் மீது காதல் வருகிறது. ஆனால் லிங்கேஷுக்கு இங்கு பல தடைகள் இருப்பதால் அவரது காதலை ஏற்க முடியாத நிலையில் இருக்கிறார்.

இறுதியில் லியாவின் ஆராய்ச்சி என்ன ஆனது அவர்கள் காதல் நிறைவேறியதா? இல்லையா? என்பதை ஞுணர்ச்சி பூர்வமாக உருவாக்கியிருக்கிறோம். ரசிகர்களுக்கு இந்த படம் ஒரு புதுவிதமான அனுபவத்தை கொடுக்கும்.

படப்பிடிப்பு கேரளா, காரைக்கால் நாகப்பட்டினம் மற்றும் பாண்டிச்சேரி போன்ற ஊர்களில் கடலும் கடல் சார்ந்த இடங்களில் நடைபெற்றுள்ளது.

படம் மே மாதம் கோடை கொண்டாட்டமாக திரையரங்குகளில் வெளியாக இருக்கிறது என்கிறார் இயக்குனர் ஜெயலட்சுமி.

# 'குட் பேட் அக்லி' திரைப்படத்தின் சக்சஸ் மீட்!

சென்னை 19, ஏப்ரல் 2025: நடிகர் அஜித் குமார் நடிப்பில் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் வெளியான படம் 'குட் பேட் அக்லி. த்ரிஷா, அர்ஜுன் தாஸ், ப்ரியா பிரகாஷ் வாரியர் உள்ளிட்ட பலர் நடித்திருக்கும் இந்தப் படம் ரசிகர்கள் மத்தியில் வெற்றிக் கொண்டாட்டமாக மாறியுள்ளது. இந்தப் படத்தின் சக்சஸ் மீட் சென்னையில் நடந்தது.

நிகழ்வில் கலந்து கொண்ட படத்தொகுப்பாளர் விஜய் வேலுக்குட்டி பேசியதாவது, "'மார்க் ஆண்டனி' மற்றும் 'குட் பேட் அக்லி' படத்தில் வாய்ப்பு கொடுத்த ஆதிக் ரவிச்சந்திரன் சாருக்கு நன்றி. இந்தப் படம் ப்ளே கிரவுண்ட் போல. எப்படி வேண்டுமானாலும் விளையாடலாம் என்ற சுதந்திரத்தை இயக்குநர் கொடுத்தார். அஜித் சார் படத்தில் பணிபுரிந்தது எனக்கு பாக்கியம். என்னுடைய அணி மற்றும் படக் குழுவினருக்கு நன்றி"

டான்ஸ் மாஸ்டர் கல்யாண், "'குட் பேட் அக்லி' படத்தின் அனுபவம் செம மாஸ். ஒவ்வொரு ஃபிரேமையும் ஆதிக் செதுக்கி இருக்கிறார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் தமிழில் வந்தது மிகப்பெரிய வரம். இந்த டீமுக்கு நான் புதிது. ஆனால், செம ஜாலியாக ஷூட்டிங் இருந்தது. ஜிவி பிரகாஷ் படத்தின் பாடல்களில் கலக்கி விட்டார். பாடல்களுக்கு விஜய் வேலுக்குட்டி செம எடிட்டிங் செய்திருந்தார். அஜித் சார் என்றாலே வேற லெவல் எனர்ஜி தான். அனைவருக்கும் நன்றி".

ஒளிப்பதிவாளர் அபிநந்தன் ராமானுஜம், "ஆதிக் சாருடைய அப்பா ரவி சாருக்கு முதல் நன்றி. அவர்தான் என்னை 'மார்க் ஆண்டனி' படத்திலும் சஜெக்ட் செய்தார். எல்லாருமே இந்தப் படத்தில் ஃபேன் பாயாக மாறிதான் வேலைப் பார்த்தோம். இதுபோல படம் எடுக்க மைத்ரியால் மட்டும் தான் முடியும். என்னுடைய டீமுக்கு நன்றி. அனு மேம் காஸ்ட்யூம் சூப்பராக இருந்தது. என்னுடைய மனைவி மற்றும் குடும்பத்திற்கு நன்றி".

ஃபைட் மாஸ்டர் சுப்ரீம் சுந்தர், "இந்தப் படத்தில் மூன்றாவது முறையாக வாய்ப்புக் கொடுத்த அஜித் சாருக்கு நன்றி. ஆதிக் சாருடன் 'மார்க் ஆண்டனி' படத்தில் வேலை பார்த்தேன். படம் வெளிவருவதற்கு முன்பு ஹால்ஸ், விக்ஸ் எடுத்துக் கொண்டு வாங்க என நான் சொன்னது சர்ச்சை ஆனது. ஆனால், படம் வேலை பார்க்கும் போதே அது ஜெயித்து விடுமா என்பது எங்களுக்குத் தெரிந்து விடும். நெகட்டிவ் எல்லாவற்றையும் தகர்த்து கொடுத்து இருக்கிறது. ஃபைட்டில் வரும் பாடல் எல்லோருக்கும் பிடித்திருக்கிறது. அர்ஜுன் தாஸ், பிரியா எல்லாருக்கும் நன்றி. படத்தை வெற்றிப் படமாக்கிய அஜித் சார் ரசிகர்களுக்கும் நன்றி" என்றார்.

காஸ்ட்யூம் டிசைனர் அனு வர்தன், "ஆதிக் உங்களுக்கு நன்றி. இந்தப் படம் எனக்கு வித்தியாசமான அனுபவம். யூயாரிப்பாளர் மைத்ரிக்கும் நன்றி. படக் குழுவினருக்கும் ரசிகர்களுக்கும் நன்றி".

நடிகர் கே.ஜி.எஃப். அவினாஷ், "ஏகே ஒரு ரெட் டிராகன். என் இயக்குநர் ஆதிக் சாருக்கு நன்றி. முதலில் அவரிடம் இருந்து ஃபோன் கால் வந்தபோது நான் நம்பவே இல்லை. என்னை சிறப்பாக காட்டியதற்கு நன்றி. படத்தில் நடித்த அனைத்து நடிகர்களுக்கும் நன்றி. அர்ஜுன் தாஸ் சாரின் குரல் எனக்கு பிடிக்கும். ரசிகர்களுக்கு நன்றி".


நடிகர் ரகு ராம், "படத்தில் வேலை பார்த்த அனைவருக்கும் வாழ்த்துகள். இந்தப் படம் பெரிய கொண்டாட்டமாக அமைந்து எனக்கு புதிய அனுபவத்தைக் கொடுத்தது. அனைத்து நடிகர்களும் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். மைத்ரி மூவி மேக்கர்ஸுக்கு நன்றி".

நடிகர் கார்த்திகேய தேவ், "என் இயக்குநர் ஆதிக்கிற்கு நன்றி. அஜித் மிகவும் இனிமையானவர். அவரிடம் இருந்து நிறைய விஷயங்கள் கற்றுக் கொண்டேன். அஜித்-த்ரிஷாவுடன் நடித்தது எனக்கு பெரிய சாதனை. அர்ஜுன் சார், ப்ரியா மேம் அனைவருக்கும் நன்றி. படம் திரையரங்குகளில் நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது".

அசார் மாஸ்டர், "இதெல்லாம் எனக்கு கிடைக்குமா என்று கனவாகவே இருக்கிறது. கடவுளுக்கும் அஜித் சாருக்கும் ஆதிக் சாருக்கும் நன்றி. ஒட்டுமொத்த படக் குழுவுக்கும் நன்றி. அர்ஜுன் சார் ஃபயராக படத்தில் ஆடியிருப்பார் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர் நிஜமாகவே ஃபயரில் தான் டான்ஸ் செய்தார். இரண்டு லெஜெண்ட் பாடல்களை ரீகிரியேட் செய்திருக்கிறோம். அதற்கு நியாயம் சேர்த்து இருக்கிறோம் என்று நினைக்கிறேன். நன்றி".

# அண்ணாநகர் பகுதியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்த நபர் கைது.

சென்னை 19, ஏப்ரல் 2025: சென்னை பெருநகரில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகள், வெளி மாநில மற்றும் ஒரு நம்பர் லாட்டரி சீட்டுகளை சட்ட விரோதமாக விற்பனை செய்யும் நபர்களை கண்காணித்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இ.கா.ப, அவர்கள் உத்தரவிட்டதின் பேரில், உதவி ஆணையாளர்களின் நேரடி மேற்பார்வையில், தனிப்படை காவல் ஆய்வாளர்கள் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு இது போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.



இதன் தொடர்ச்சியாக, கே-4 அண்ணாநகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் 16.04.2025 அன்று அண்ணாநகர், நடுவாங்கரை பாலம் அருகே கண்காணித்து, சட்டவிரோதமாக வெளி மாநில லாட்டரி சீட்டுகளை எழுதிக்கொடுத்து விற்பனை செய்து கொண்டிருந்த திவாகர், வ/30, த/பெ.இராபர்ட், எண்.19, அன்னை தெரசா நகர், கள்ளிக்குப்பம், அம்பத்தூர், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து ரொக்கம் ரூ.250 மற்றும் துண்டு சீட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி திவாகர் விசாரணைக்குப் பின்னர் 16.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com
RNI No. - TNTAM24840
உள்ளது உள்ளபடி



# ஹாலிவுட் பிரபலங்களின் பாராட்டு மழையில் தமிழர் தயாரித்த ‘சிட்டி ஆப் ட்ரீம்ஸ்’ஹாலிவுட் திரைப்படம்...

சென்னை 19, ஏப்ரல் 2025: தென் தமிழகத்தின் கம்பம் பள்ளத்தாக்கில் பிறந்து, அமெரிக்காவின் சிலிக்கான் பள்ளத்தாக்கில் தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் ஒரு தொழிலதிபராக மிகப்பெரிய வெற்றியை கண்டவர் தமிழர் ரூஃபஸ் பார்க்கர் அவர்கள். சிறுவயது முதல் திரைக்கலை உருவாக்கத்தின் மீதான தனியாத பற்றின் காரணமாக, 2014 -ல் அமெரிக்காவில் பி2 பிலிம்ஸ் என்கிற திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தை துவக்கி, ‘ஸ்டார்வ்’ என்கிற ஒரு ஹாரர் படத்தை தயாரித்து அமெரிக்க ஹாலிவுட் திரைஉலகில் ஒரு வெற்றித் தயாரிப்பாளராக முத்திரை பதித்தார்.



‘ஸ்டார்வ்’ திரைப்படம் சிட்ஜெஸ் போன்ற சர்வதேச திரைப்பட விழாவில் கலந்து கொண்டு பாராட்டுகளை பெற்றது. ‘ஸ்டார்வ்’ திரைப்படம் தந்த வெற்றியை தொடர்ந்து, ‘வைல்டு நைட்ஸ் வித் எமிலி’ என்கிற திரைப்படத்தை தயாரித்தார்ஞ்இந்த திரைப்படமும் விமர்சனரீதியாகவும் வசூல் ரீதியாகவும் பெரும் வெற்றியை அடைய, அடுத்தடுத்து, ஸ்பைடர்மேன் திரைப்படம் மூலம் பிரபலமான ஆண்ட்ரூ கேர்பீல்ட் நடிப்பில் உருவான ‘அன்டர் த சில்வர் லேக்’ திரைப்படம் பின்னர் ‘ஃபிலிஞ்ச்’ திரைப்படம் என திரு. ரூபஸ் பார்க்கர் அவர்களின் உன்னதமான திரைப் பயணம் மிக நிதானமாக பெரும் வெற்றிகளை நோக்கி பயணித்தது.

இதுவரை பொழுது போக்கு ரீதியிலான திரைப்படங்களை தயாரித்துக் கொண்டிருந்த ரூஃபஸ் அவர்கள், கடந்த 20 வருடங்களாக அமெரிக்க குடிமகனாக தனக்கிருக்கும் சமூக அக்கறையோடு, அமெரிக்காவின் வெளி உலகத்திற்கு தெரியாத சமூக அவலத்தை வெளிக்கொணரும்விதமாக, அமெரிக்க திரைவரலாற்றில் அதிகம் சொல்லத் துணியாத உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு சிட்டி ஆஃப் ட்ரீம்ஸ் எனும் ஒரு திரைப்படத்தை தயாரித்து, பெரும் எதிர்பார்ப்புகளிடையே தற்போது வெளியிட்டு இருக்கிறார்.

இந்த திரைப்படம் அமெரிக்காவில் புலம் பெயர் குழந்தைத் தொழிலாளர்களுக்கு நடக்கும் மிகப்பெரும் அநீதியை பட்டவர்த்தனமாக வெளி உலகிற்கு தோலுரித்து காட்டி உள்ளது. அமெரிக்காவில் இதுவரை 12 மில்லியன் புலம் பெயர் தொழிலாளர்கள் கடத்தப்பட்டு, அவர்கள் அனைவரும் ஆடை தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சட்டத்திற்கு புறம்பாக உழைப்பு மற்றும் பாலியல் சுரண்டல்களுக்கு ஆளாக்கப் படுவதை உண்மைக்கு வெகு நெருக்கமாக சொல்லி வெற்றியடைந்திருக்கிறார்ஞ் அந்த கடத்தப்பட்ட 12 மில்லியன் குலுந்தைகளில் ஒரு சிறுவனின் உண்மைக் கதையைத் தான் திரு. ரூஃபஸ் பார்க்கர் அவர்களின் சிட்டி ஆஃப் ட்ரீம்ஸ் எனும் இந்த திரைப்படம் அமெரிக்காவின் கருப்பு பக்கத்தை வெளி உலகிற்கு பெரும் வலியாக உணர்த்தியிருக்கிறது.

இப்படி கடத்தப்பட்ட புலம் பெயர் குழந்தை தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டல் மூலம், அமெரிக்கா முழுவதும் நடந்து கொண்டிருந்த, ஆண்டுக்கு 50 மில்லியன் டாலர் வியாபார நெட்வொர்க்கின் பின்னணியை இந்த திரைப்படம் வெளிக்கொண்டு வந்திருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முதல் ஹாலிவுட் நடிகர்களான சில்வெஸ்டர் ஸ்டெலோன் உள்ளிட்ட பலரின் பாராட்டுக்களை பெற்றிருக்கும் இந்த திரைப்படம், லைன்ஸ் கேட் எனும் பெரும் ஹாலிவுட் திரைப்பட வெளியீட்டு நிறுவனத்தின் மூலம், கடந்த ஆகஸ்ட் மாதம் உள்நாட்டு வெளியீடாக மட்டும் சுமார் ஆயிரம் தியேட்டர்களில் இந்த படம் திரையிடப்பட்டு அமெரிக்க மக்கள் மற்றும் ஊடகங்களில் முக்கிய பேசுபொருளாக மாறியிருக்கிறது.. அமெரிக்காவின் திரைப் பிரபலங்கள் சில்வஸ்டர் ஸ்டோலன், மெல் கிப்சன், டோனி ராபின்ஸ், மைக் டைசன் உள்ளிட்ட பல பிரபலங்கள் இந்த படத்தை இணைய தளங்கள் மூலமாக பாராட்டி பதிவிட்டுருப்பது இந்த படத்தின் சமூக தாக்கத்திற்கு பெரும் சான்றாக ளுள்ளது.

*ளேலும் இந்த பாராட்டுகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், சிட்டி ஆஃப் ட்ரீம்ஸ் திரைப்படத்தில் சொல்லப்பட்டிருக்கும் சமூக அக்கறையை கருத்தில்கொண்டு, சமீபத்தில், இந்த திரைப்படம் ஆஸ்கர் அகாடமி லைப்ரரியில் சேர்க்கப் பட்டிருப்பது மிகவும் பெருமைக்குரிய செய்தி ஆகும்.*

# சினிமாவில் ஆண் இயக்குனர்களுக்கு நிகராக பெண் இயக்குனர்கள் வரவேண்டும் " என் காதலே " படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழாவில் இயக்குனர் டாணாக்காரன் தமிழ் பேச்சு ..

சென்னை 19, ஏப்ரல் 2025: பெரியார் எப்போதும் அறிவுக்கு முரணாக பேசியதே இல்லை " என் காதலே " படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் சமூக செயல்பாட்டாளர் சூர்யா சேவியர் பேச்சு ..



பெண்கள் சினிமாவில் தங்களை நிலைநிறுத்த ஒவ்வொரு காலகட்டத்திலும் எடுக்கும் முயற்சிகள் அலப்பறியது " என் காதலே " படதின் டிரெய்லர் வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் , சமூக செயல் பாட்டாளர் சூர்யா சேவியர் பேச்சு ..

" என் காதலே " பட டிரெய்லர் வெளியீட்டு விழா !!

ஸ்கை வான்டர்ஸ் என்டர்டெய்ன்மென்ட் என்ற பட நிறுவனம் சார்பில், இயக்குநர் ஜெயலட்சுமி தயாரித்து எழுதி இயக்கியிருக்கும் படம் " என் காதலே ". மீனவ மக்கள் வாழ்க்கை பின்னணியில் ஒரு மென்மையான, முக்கோண காதல் கதையாக உருவாகியுள்ள இப்படத்தில், “காலேஜ் ரோட்” படத்தில் நாயகனாகவும் நடித்த லிங்கேஷ், இப்படத்தில் நாயகனாக நடித்துள்ளார். லண்டனைச் சேர்ந்த பிரிடிஷ் நடிகை லியா மற்றும் திவ்யா தாமஸ் இருவரும் நாயகிகளாக நடித்துள்ளார்.

விரைவில் திரைக்கு வரவுள்ள இப்படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழா, படக் குழுவினருடன் திரைப் பிரபலங்கள் கலந்து கொள்ள, பத்திரிக்கை ஊடக நண்பர்கள் முன்னிலையில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்வினில்..

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இயக்குநர் கௌதம் ராஜ் பேசியதாவது

இப்படக் குழுவினுக்கு என் வாழ்த்துக்கள். முக்கியமாக இரண்டு பேருக்கு வாழ்த்து சொல்ல வேண்டும். நடிகர் லிங்கேஷ் பவர்புல்லான ஆக்டர், மிகத்திறமையானவர். சினிமாவில் நல்ல திறமை இருந்தும் அது வெளிப்படாமலே பலர் காணாமல் போய் விடுகிறார்கள்.

ஆனால் இவர் தொடர்ச்சியாக தனக்கான இடத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். அவருக்கு என் வாழ்த்துக்கள். நண்பர் டோனி. நானும் அவரும் ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டில் படித்தோம்.

அவன் மிகப்பெரிய கேமரா மேன் ஆக வேண்டியவன், அவனுக்கு தெரியாதது ஏதும் இல்லை. அவனுக்கும் என் வாழ்த்துக்கள். இப்படம் வெற்றி பெற என் வாழ்த்துக்கள்.

# வக்ப் திருத்தச் சட்டம் - 2025 திரும்ப பெற வேண்டும் இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் நாடு தழுவிய போரட்டம் தொடரும், திட்டமிட்டபடி பதினெட்டாம் தேதி தமிழகத்தில் உள்ள மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அறிவிப்பு

சென்னை 19, ஏப்ரல் 2025:ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி அரசு, வக்பு திருத்தச் சட்டம் என்ற பெயரில் வக்பு அமைப்பையே சீர்குலைக்கும் வகையில் சட்டம் இயற்றி, தனக்குள்ள எதேச்சாதிகார பலத்தைக் கொண்டு சட்டமாக்கி, நாட்டில் அமுலாக்கம் என்று அறிவித்துப் பெருமைப் பட்டுக் கொண்டது.

நாட்டில் உள்ள அனைத்து ஜனநாயக அமைப்பு தரும் இதற்கு நாடு முழுவதிலும் எதிர்ப்பைத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள், தர்ணாகள் கூட்டங்கள் நடத்தி வந்தனர்

அத்தோடு இந்த சட்டத்தை அமுலாக்க கூடாது என்று அறிவிக்க கோரி உச்ச நீதி மன்றத்தில் அனைத்து ஜனநாயக அரசியல் அமைப்பு களும் வழக்கு தொடுத்தன.

நேற்று 16-4-2025 மதியம் 2 மணிக்கு துவங்கிய விசாரணை 17-4-2025 மதியம் 2 மணி அளவில் நிறைவு பெற்றது. வக்ஃப் திருத்தச் சட்டம் எனும் பெயரில் புதிதாக அறிவித்திருக்கும் அனைத்து மாற்றங்களும் நடைமுறைக்கு உகந்தது அல்ல என்று அறிவித்து நேற்று வரை தொடர்ந்த வக்ஃப் சட்ட மரபுகள் தொடரும் என உச்ச நீதிமன்றம் அதிரடி அறிவிப்பு செய்திருக்கிறது.

நாடு முழுவதிலும் இந்த உச்ச நீதிமன்ற அதிரடி அறிவிப்புக்கு வரவேற்பு கிடைத்திருக்கிறது.

வக்ஃப் திருத்தச் சட்டம் அறிமுக நிலையிலேயே இந்த கருப்புச் சட்டத்தை திரும்ப பெற வேண்டும் என்று தமிழக சட்டப்பேரவையில் முதன் முதலில் தீர்மானம் நிறைவேற்றி தனது எதிர்ப்பை தெரிவித்த தமிழக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்தியாவில் வாழும் 25 கோடி முஸ்லிம் சமுதாயமும், ஜனநாயக சக்திகள் அனைத்தும் நன்றியும் வாழ்த்தும் கூற கடமைப் பட்டிருக்கிறது.

உச்ச நீதிமன்றத்தில் இறுதி தீர்ப்பு வரும் போது இந்திய அரசியலமைப்புச் சட்டம் பாதுகாக்கப் பட்டுள்ளது குடிமக்களின் மதச்சார்பான உரிமைகள் என்றும் போல் பாதுகாப்பாக உள்ளன.

இந்தியா எனும் இந்த மாபெரிய நாடு உலகிற்கு வேற்றுமையில் ஒற்றுமையை பறைசாற்றிக் கொண்டிருக்கும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் வக்ஃப் திருத்த சட்டத்தை ஒன்றிய அரசு திரும்ப பெற வலியுறுத்திய அனைத்து கட்சியினருக்கும் நன்றியும், வாழ்த்தும் உரித்தாக்குகிறோம்.

அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியம், ஜமாத்துல் உலமாயே ஹிந்த், தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை, கேரள சமஸ்த ஜமிஅத்துல் உலமா மற்றும் அனைத்து அமைப்புகளும் எதிர்ப்பை தெரிவித்து இருக்கின்றன.

இந்திய யூனியன் முஸ்லிம் லீகினர் நாடு தழுவிய ஆர்ப்பாட்டங்கள் நடத்தி தங்களின் எதிர்ப்பை தெளிவாக தெரிவித்து இருக்கிறார்கள்.

தமிழகம் முழுவதிலும் ஏப்ரல் 18ஆம் தேதி அன்று அறிவிக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டக் கூட்டங்கள் திட்டமிட்டபடி தொடர்ந்து நடத்தப்படும் என்றும், வக்ஃப் சட்ட விளக்கமும், உச்ச நீதிமன்றம் இடைக்கால நிவாரணமாக அறிவித்திருப்பதை வரவேற்றும், ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி அரசு மேற்கொண்டு வரும் முஸ்லிம் சமுதாய விரோத போக்கை கண்டித்தும் உரைகள் நிகழும் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெற்ற ஐஇஇஇ ஐசிடிஎஸ்பிஎஸ் 2025 மாநாடு

சென்னை 19, ஏப்ரல் 2025: எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஐஇஇஇ ஐசிடிஎஸ்பிஎஸ் 2025 மாநாடு நடைபெற்றது. ணூாட்டாங்கொளத்தூர், இந்தியா - ஏப்ரல் 17, 2025 - ஐஇஇஇ 2வது சர்வதேச தரவு அறிவியல் மற்றும் வணிக அமைப்புகள் மாநாடு (ஐசிடிஎஸ்பிஎஸ் 2025), எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் டாக்டர். டி.பி. கணேசன் கலையரங்கத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது.



இந்த மாநாட்டில் தொடர்ச்சியான முக்கிய உரைகள் இடம் பெற்றன. எஸ்ஆர் எம்ஐஎஸ்தி இன் கணினி தரவு அறிவியல் பள்ளியின் பேராசிரியர் மற்றும் தலைவர் - டிஎஸ்பிஎஸ் மற்றும் மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் டாக்டர். வி. கவிதா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். எஸ்ஆர்எம்ஐஎஸ்தி இன் கணினி அறிவியல் பள்ளியின் சிஎஸ்பிஎஸ் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் பேராசிரியர் மற்றும் மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் டாக்டர். இ. சசிகலா அவர்கள் மாநாட்டின் அறிமுக உரையை வழங்கினார்.

எஸ்ஆர்எம்ஐஎஸ்தி இன் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியின் பேராசிரியர் மற்றும் டீன் டாக்டர். எம். லீனஸ் ஜே மார்ட்டின் அவர்கள் தலைமை உரையை நிகழ்த்தினார்.

அதில் வாகனத் துறையில் தரவின் பரவலான வளர்ச்சி மற்றும் முக்கியத் துவத்தைப் பற்றி எடுத்துரைத்தார். எஸ்ஆர்எம்ஐஎஸ்தி இன் கணினி அறிவியல் பள்ளியின் பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர். ரேவதி வெங்கடராமன் மற்றும் இணைத் தலைவர் டாக்டர். சி. லட்சுமி ஆகியோர் சிறப்புரைகளை வழங்கினர்.

ஏதிஓஎஸ் இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவற்றின் சியீஓ திரு. விக்ரம் பால கிருஷ்ணன் அவர்கள் “இன்றைய உலகில், தரவு மிகவும் முக்கியமானது - எல்லாம் அதைச் சுற்றியே உள்ளது. பல ஆண்டுகளாக நாம் சேகரித்த தரவுகளின் உண்மையான திறனைப் பயன்படுத்த வேண்டும். நிதி, உற்பத்தி, சில்லறை விற்பனை மற்றும் பொதுத்துறை உட்பட அனைத்து வணிகங்களும் தொழில் நுட்பத்தை ஆழமாகப் பதித்துள்ளன, மேலும் அவற்றின் மையத்தில் ஒரு கிமி மற்றும் தரவு வணிக வரி அம்சம் உள்ளது.

இது அனைத்தும் நாம் அதிலிருந்து அதிகபட்ச திறனை எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதைப் பற்றியது. தரவு பல துறைகளைக் கொண்டது, இன்றைய ஒவ்வொரு வணிகமும் உருவாக்கும் ஏஐ இன் சக்தியைப் பயன்படுத்த முயல்கிறது”. என்று கூறினார்.

ஹைதராபாத்தில் உள்ள மேம்பட்ட அமைப்புகள் ஆய்வகத்தின் சிபிடிசி தொழில்நுட்ப இயக்குனர் மற்றும் சிறந்த விஞ்ஞானி என்று அறியப்படும் டாக்டர். மனோஜ் குமார் புராகோஹைன் அவர்கள், பொருட்கள் உற்பத்தியில் தரவு அறிவியலின் பயன்பாட்டைப் பற்றி விவரித்தார். ஐஇஇஇ மெட்ராஸ் பிரிவின் பொருளாளரும், எஸ்எஸ்என் பொறியியல் கல்லூரியின் முதல்வருமான டாக்டர். எஸ். ராதா அவர்கள் ஐஇஇஇ மாநாட்டின் மதிப்பை வலியுறுத்தினார்.

இந்த மாநாட்டில் உலகளாவிய மற்றும் தேசிய அளவில் 1482 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. பெரு, டென்மார்க், ஆஸ்திரேலியா, மால்டா, தைவான், சீனா, கனடா, ரஷ்யா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முக்கிய வல்லுநர்கள் இந்த நிகழ்வில் பங்களித்தனர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# இராயபுரம் பகுதியில் ஒருவரை மிரட்டி பணத்தை பறித்த சரித்திர பதிவேடு குற்றவாளி கைது.

சென்னை 19, ஏப்ரல் 2025: சென்னை, காசிமேடு, சிங்காரவேலன் நகர் பகுதியில் வசித்து வரும் தேவா, வ/35, த/பெ.ராஜி என்பவர் ரிக்ஷா ஓட்டி தொழில் செய்து வருகிறார். இவர் கடந்த 16.04.2025 அன்று காலை, இராயபுரம், தொப்பை தெரு, பிச்சாண்டி தெரு சந்திப்பில் ரிக்ஷா ஓட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்த போது, அங்கு வந்த வினோத்குமார் என்பவர் மேற்படி தேவாவை வழிமறித்து, தகாத வார்த்தைகள்



பேசி, கையால் தாக்கி, அவர் சட்டைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.200/-ஐ பறித்துக் கொண்டு தப்பிச் சென்றார். இது குறித்து தேவா, என்-1 இராயபுரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

என்-1 இராயபுரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி வினோத்குமார், வ/32, த/பெ.வேளாங்கண்ணி, செட்டித்தோட்டம் குடிசைப்பகுதி, இராயபுரம், சென்னை என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி வினோத்குமார் என்பவர் என்-1 இராயபுரம் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே கொலை, அடிதடி, வழிப்பறி உட்பட 7 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி வினோத்குமார் விசாரணைக்குப் பின்னர் 16.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# டால்மியா பாரத் அறக்கட்டளை 77 திக்ஷா யிற்சியாளர்களுக்கான பாராட்டு விழாவை டால்மியாபுரத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

திருச்சி 19, ஏப்ரல் 2025: டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்டின் கார்ப்பரேட் சமூகப் பொறுப்புணர்வுப் பிரிவான டால்மியா பாரத் அறக்கட்டளை (டிபிஎஃப்), அதன் முதன்மை திறன் மேம்பாட்டுத் திட்டமான திக்ஷா இன் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்களின் சாதனைகளை அங்கீகரித்து கொண்டாட டால்மியாபுரத்தில் ஒரு பாராட்டு விழாவை நடத்தியது. மொத்தம் 77 பயிற்சியாளர்களுக்கு அந்தந்த படிப்புகளை வெற்றிகரமாக முடித்த தற்காக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



பயிற்சியாளர்களில், வீட்டு சுகாதார உதவியாளர் (ஹெச்ஹெச்ஏ) பாடநெறியில் 27 இளைஞர்கள் சுகாதாரத் துறையில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர், மாதத்திற்கு ரூபாய்15,000 முதல் ரூபாய்24,000 வரை சம்பளம் வழங்கப் படுகிறது.

கூடுதலாக, 50 பெண்கள் தையல் இயந்திர ஆபரேட்டர்களாகப் பயிற்சி பெற்றனர், வேலை வாய்ப்பைத் தொடர அல்லது சொந்த தொழில் முனைவோர் முயற்சிகளைத் தொடங்க அவர்களுக்குத் தேவையான தையல் திறன்களை 'ழங்கினர்.

இந்த விழா பயிற்சியாளர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் ஒரு பெருமையான தருணமாக அமைந்தது, அடிமட்ட மட்டத்தில் அர்த்தமுள்ள மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான டிபிஎஃப் இன் தொடர்ச்சியான முயற்சிகளை வலுப் படுத்தியது.

டால்மியாபுரத்தில் உள்ள டிசிபிஎல் இன் நிர்வாக இயக்குநர் திரு. கே.விநாயகமூர்த்தி, டால்மியா பாரத் அறக்கட்டளை குழுவின் மூத்த உறுப்பினர்களுடன் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார்.

தனது உரையில், திரு. விநாயகமூர்த்தி, "டால்மியா பாரத்தில், திறன் மேம்பாடு என்பது வலுவான, தன்னம்பிக்கை கொண்ட இந்தியா விற்கான அடித்தளம் என்று நாங்கள் நம்புகிறோம்.

திக்ஷா மூலம், இளைஞர்கள் மற்றும் பெண்கள் இருவரையும் நடைமுறை, தொழில்துறை தொடர்பான திறன்களுடன் சித்தப்படுத்துவதன் மூலம் உள்ளடக்கிய வாய்ப்புகளை உருவாக்க நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.

எங்கள் சமீபத்திய பயிற்சி பெற்றவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் என்பது குறிப்பாக ஊக்கமளிக்கிறது, இது பாலின உள்ளடக்கிய வளர்ச்சி மூலம் சமூகங்களை மேம்படுத்துவதில் எங்கள் கவனத்தை பிரதிபலிக்கிறது."

திக்ஷா என்பது டால்மியா பாரத் நிறுவனத்தின் ஒரு முதன்மை சமூக முயற்சியாகும், இது இந்தியாவிற்கு எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் பணியாளர்களை உருவாக்க உதவும் வகையில், இளைஞர்களை தொழில்துறை சார்ந்த திறன்களுடன் சித்தப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

இது தற்போது பல்வேறு இடங்களில் 23 பயிற்சி மையங்களை நடத்தி வருகிறது. இன்றுவரை, 22625 நபர்கள் திக்ஷா மூலம் பயிற்சியை முடித்துள்ளனர்,

அவர்களில் பலர் ஐஎன்ஆர் 8,000 முதல் ஐஎன்ஆர் 24,000 வரை மாத வருமானம் ஈட்டுகின்றனர். குறிப்பாக, பயிற்சி பெண்களில் 63% பெண்கள், பாலின உள்ளடக்கம் மற்றும் அதிகாரமளிப்புக்கான திட்டத்தின் வலுவான உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. 'லைவாய்ப்பு வாய்ப்புகள் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதன் மூலம் சமூகங்கள் மேலும் தன்னம்பிக்கை அடைய உதவுவதில் இந்த முயற்சி முக்கிய பங்கு வகிக்கிறது.

# புனிததோமையர்மலை பகுதியில் வீண்தகராறு காரணமாக ஆட்டோவின் முன்பக்க கண்ணாடியை கல்லால் உடைத்து சேதப்படுத்திய நபர் கைது.

சென்னை 19, ஏப்ரல் 2025: சென்னை, புனிததோமையர்மலை பகுதியில் வசித்து வரும் வீரா என்பவர் ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறார். கடந்த 14.04.2025 அன்று மாலை, வீராவும் அவரது மனைவியும், மேற்படி வீட்டின் முன்பு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த போது, அதே பகுதியைச் சேர்ந்த பிரவின்குமார் என்பவர் சாலையில் அங்கும் இங்குமாக நடந்து சென்று கொண்டிருந்த போது, வீரா, பிரவின்குமாரை பார்த்து ஏன் இப்படி நடந்து சென்று கொண்



டிருக்கிறாய்? என்று கேட்டுள்ளார். அப்போது இருவருக்கு மிடையே வாய்த்தகராறு ஏற்படவே, தகராறு முற்றிய நிலையில், பிரவின்குமார் என்பவர் மேற்படி வீரா மற்றும் அவரது மனைவியை தகாத வார்த்தைகள் பேசி, கல்லால் தாக்க முயற்சி செய்து, கொலைமிரட்டல் விடுத்து, வீட்டிற்கு வெளியில் நிறுத்தி யிருந்த வீராவின் ஆட்டோவின் முன்பக்க கண்ணாடியை கல்லால் உடைத்து சேதப் படுத்தி விட்டு, அங்கிருந்து தப்பிச் சென்றார். இது குறித்து வீராவின் மனைவி, எஸ்1 புனித தோமையர்மலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (பிஎன்எஸ் ஆக்ட்) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் (தின்பி ஹெச்டபிள்யு) ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

எஸ்-1 புனித தோமையர்மலை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி பிரவின்குமார், வ/23, த/பெ. மனோகரன், தண்டுமா நகர், புனித தோமையர் மலை, சென்னை என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி பிரவின்குமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவின் (ஏஎன்ஐயு) தொடர் நடவடிக்கையால் திருவான்மியூர் பகுதியில் ஹெராயின் போதைப்பொருள் வைத்திருந்த நபர் கைது,7.54 கிராம் ஹெராயின் பறிமுதல்.

சென்னை 19, ஏப்ரல் 2025: சென்னை பெருநகர காவல், போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு தெற்கு (ஏஎன்ஐயு) தனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், ஏஎன்ஐயு தனிப்படையினர் மற்றும் ஜே-6 திருவான்மியூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் நேற்று (16.04.2025) திருவான்மியூர், பெரியார் நகர்,



காமராஜர் தெரு, அருகே கண்காணித்த போது, அங்கு சந்தேகப் படும்படி நின்றிருந்த நபரை விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர் ஹெராயின் என்ற போதைப்பொருளை மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், ஜே-6 திருவான்மியூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, சட்ட விரோதமாக ஹெராயின் போதைப் பொருள் வைத்திருந்த ஷாகின் இஸ்லாம், வ/21, த/பெ.சுராஜ் மியா, திரிபுரா மாநிலம் என்பவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து 7.54 கிராம் ஹெராயின் மற்றும் 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி மேற்படி ஹெராயின் போதைப்பொருளை திரிபுரா மாநிலத்திலிருந்து கடத்தி வந்து சென்னையில் விற்பனை செய்து வந்தது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி ஷாகின் இஸ்லாம் விசாரணைக்குப் பின்னர் 16.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# காங்கோவில் சோக சம்பவம்; படகில் தீ விபத்து: 50 பேர் பலி

சென்னை 19, ஏப்ரல் 2025: காங்கோ படகில் தீ விபத்து ஏற்பட்டதில் 50 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். நெஞ்சை உலுக்கும் இந்த சோக சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:

மத்திய ஆப்பிரிக்க நாடான காங்கோவில் உள்ள ஆறுகளில் படகு போக்குவரத்து முக்கியமான ஒன்றாக இருக்கிறது. அங்கு வசிக்கும் மக்கள் படகு போக்குவரத்தை விரும்புகின்றனர்.

இந் நிலையில், வட மேற்கு காங்கோவில் உள்ள மடான் குமு துறை முகத்தில் இருந்து போலோம்பா பகுதிக்கு ஒரு மோட்டார் படகில் 400க்கும் மேற்பட்டோர் பயணம் மேற் கொண்டனர். பன்டாக்கா பகுதியில் படகு சென்று கொண்டிருந்த போது பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. படகில் பயணம் செய்தவர்கள் தீ விபத்தில் இருந்து தப்பிக்க ஆற்றில் குதித்தனர். இதில் படகு ஆற்றில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் 50 பேர் உயிரிழந்தனர்.

இதில் பெண்கள் மற்றும் குழந் தைகள் அடங்குவர். சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர் நீண்ட நேரம் போராடி 100க்கும் மேற்பட்டவர்களை லேசான காயத்துடன் மீட்டனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

காணாமல் போனவர்களை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. படகில் பெண் ஒருவர் சமையல் செய்த போது தீ விபத்து ஏற்பட்டதாக விசாரணையில் தெரியவந்தது.

# தீரன் சின்னமலை படத்துக்கு முதல்வர் ஸ்டாலின் மரியாதை

சென்னை 19, ஏப்ரல் 2025: சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் பிறந்த நாளையொட்டி, சென்னை கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவரது சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவ படத்திற்கு தமிழக அரசு சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அப்போது அமைச்சர்கள் முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், சக்கரபாணி, செந்தில்பாலாஜி,



மா.சுப்பிரமணியன், கயல்விழி செல்வராஜன், மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வபெருந்தகை, ஈ.ஆர்.ஈஸ்வரன், அரவிந்த் ரமேஷ், கணபதி, பிரபாகர ராஜா, துணை மேயர் மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குனர் வைத்தியநாதன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி மற்றும் கொங்கு பேரவை நிர்வாகிகள் உடனிருந்தனர்.

இந்த புகைப்படத்தை எக்ஸ் தளத்தில் பகிர்ந்த முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்ததாவது:

"ஓடாநிலையில் கோட்டை கட்டிப் போராடிய ஒப்பற்ற வீரர் தீரன் சின்னமலையின் பிறந்தநாள் இன்று. அந்நியர் ஆதிக்க எதிர்ப்புணர்வு இன்று வரை நம் தமிழ் மண்ணில் தீவிரமாக விளங்குகிறதென்றால், அன்றே ஆங்கிலேயருக்கு எதிரான தம் போரால் அதற்கு வித்திட்ட வீரர்தான் சின்னமலை.

அவர் வீரமும் புகழும் வாழ்க" எனப் பதிவிட்டுள்ளார்.

# இந்தியா ஸ்டீல் 2025 - சர்வதேச எஃகு கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி மும்பையில் ஏப்ரல் 24 முதல் 26 வரை நடைபெறுகிறது: பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்

சென்னை 19, ஏப்ரல் 2025: இந்தியா ஸ்டீல் 2025 கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி மும்பையில் 2025 ஏப்ரல் 24 முதல் 26-ம் தேதி வரை நடைபெற உள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த சர்வதேச கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் தற்போது 6வது முறையாக நடைபெற உள்ளது. 2025 ஏப்ரல் 24-ம் தேதி இந்த மாநாடு மற்றும் கண்காட்சியை காணொலி மூலம் பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைத்து உரையாற்ற உள்ளார்.

இந்த 3 நாள் நிகழ்வில், எஃகு துறையின் வளர்ச்சி, நிலைத்தன்மை, புத்தாக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் நிகழ்வுகள் இடம் பெறும். தேசிய எஃகு கொள்கைக்கு ஏற்ப, 2030-ம் ஆண்டுக்குள் 300 மில்லியன் டன் எஃகு உற்பத்தி திறன் என்ற இலக்கை அடையும் நோக்கில் இந்தியா செயல்பட்டு வருகிறது. எஃகுத் துறையில் மாநிலங்களுக்கு இடையேயான மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை அதிகரிக்கவும் அறிவு பரிமாற்றத்தை எளிதாக்கவும், வர்த்தகம் செய்வதை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட இந்தியாவின் கொள்கை சீர்திருத்தங்களை எடுத்துரைக்கும் வகையில் இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய எஃகு அமைச்சர் திரு எச்.டி.குமாரசாமி, இணையமைச்சர் திரு பூபதி ராஜு சீனிவாச வர்மா, மகாராஷ்டிரா முதலமைச்சர் திரு தேவேந்திர பட்னாவிஸ், சத்தீஸ்கர் முதலமைச்சர் திரு விஷ்ணு தியோ சாய் உள்ளிட்டோர் 24 ஏப்ரல் 2025 அன்று தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர்.

ஊத்திய வர்த்தகம் மற்றும் தொழில்கள் அமைச்சர் திரு பியூஷ் கோயல், ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி, சுரங்கத் துறை அமைச்சர் திரு ஜி கிஷன் ரெட்டி, ஒடிசா முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி உள்ளிட்டோரும் மாநாட்டின் முக்கிய அமர்வுகளுக்கு தலைமை வகிக்க உள்ளனர்.

12,000-க்கும் மேற்பட்ட வணிகப் பார்வையாளர்கள், 250 கண்காட்சியாளர்கள், பல்வேறு மத்திய அரசுத் துறைகள், மாநில அரசுகள், பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்கும் இந்த மாநாடு உலக அளவில் மிகப்பெரிய எஃகு தொடர்பான நிகழ்வுகளில் ஒன்றாக அமைந்துள்ளது.